Amãna Bank

It's Your Bank

# ANNUAL GENERAL MEETING

# වාර්ෂික මහා සභා රැස්වීම

# வருடாந்தப் பொதுக் கூட்டம்

# அமானா வங்கி பி.எல்.சி.

(கம்பனி பதிவீட்டு இலக்கம் PB3618PQ)
இலக்கம் 486, காலி வீதி, கொழும்பு 3.

அன்புள்ள பங்குதாரர்,

**ஆண்டறிக்கை 2023**

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் (கொ.ப.ப.) பட்டியலிடல் விதி இலக்கம் 7.5b – ஆண்டறிக்கையின் சுற்றோற்றம் தொடர்பான திருத்தங்களின் பிரகாரம், பட்டியலிடப்பட்ட கம்பனிகள் அவற்றின் பங்குதாரர்களுக்கு ஆண்டறிக்கைகளை அனுப்பும் முறையினை தேர்ந்தெடுப்பதற்கான தெரிவுரிமையினைக் கொண்டுள்ளன. இந்த விதிக்கிணங்க, அமானா வங்கி பி.எல்.சி. (வங்கி) 2023 ஆம் ஆண்டிற்கான அதன் ஆண்டறிக்கையினை வங்கியின் மற்றும் கொ.ப.ப. இன் இணையத்தளங்களில் பதிவேற்றம் செய்வதற்கு தீர்மானித்துள்ளது. அதைப் பற்றிய விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

பங்குதாரர்கள் 2023 ஆம் ஆண்டிற்கான வங்கியின் ஆண்டறிக்கையினை, பின்வரும் இணையத்தளங்களுக்கு சென்று அல்லது கீழே குறிப்பிடப்பட்டுள்ள QR குறியீட்டினை ஸ்கேன் செய்து அணுக முடியும்.

அ. வங்கி இணையத்தளம் : www.amanabank.lk
ஆ. கொ.ப.ப. இணையத்தளம் : www.cse.lk
இ. QR குறியீடு: :

2023 ஆண்டறிக்கையின் அச்சிடப்பட்ட பிரதியொன்றினை நீங்கள் பெற விரும்பினால், தயவு செய்து இந்த சிற்றேட்டுடன் இணைக்கப்பட்டுள்ள '2023 ஆண்டறிக்கையின் அச்சிடப்பட்ட பிரதிக்கான வேண்டுதல் படிவத்தில்' வேண்டப்பட்டுள்ள தகவல்களை அதில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவித்தல்களின் பிரகாரம், பூர்த்தி செய்து அனுப்பிவைக்கவும். வங்கியானது எழுத்துமூல வேண்டுதல் கிடைக்கப்பெற்று எட்டு (8) சந்தை தினங்களினுள் ஆண்டறிக்கையின் அச்சிடப்பட்ட பிரதியொன்றினை அனுப்பிவைக்கும்.

அமானா வங்கி பி.எல்.சி இன் பணிப்பாளர்கள் சபையானது ஒரு டிஜிட்டல் தளத்தினூடாக அதன் பதினைந்தாவது வருடாந்தப் பொதுக் கூட்டத்தினை நடாத்துவதற்கு தீர்மானித்துள்ளது. ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ள விரும்பும் பங்குதாரர்கள் இச்சிற்றேட்டின் பக்கம் 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள அவசியமான அறிவுறுத்தல்களை பின்பற்றுவதன்மூலம் கலந்துகொள்ளலாம்.

மேற்குறிப்பிட்டவை தொடர்பாக ஏதேனும் உறுதுணை அல்லது விளக்கம் உங்களுக்கு தேவையாயின், கம்பனி செயலகத்தின் பின்வரும் உத்தியோகத்தரை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 5.00 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் தொடர்புகொள்ளலாம்.

**திருமதி. சஹீலா சிப்லி - உதவி கம்பனி செயலாளர்**
தொலைபேசி: +94 11 7757511 | தொலைநகல்: +94 11 2565550 | மின்னஞ்சல்: shaheela.shibly@amana.lk

சபையின் கட்டளையின் பிரகாரம்
**அமானா வங்கி பி.எல்.சி.**

**செல்வி பி.எஸ். வட்சன்**
*கம்பனி செயலாளர்*

17 பெப்ரவரி 2024
கொழும்பு.

# வருடாந்தப் பொதுக் கூட்டத்திற்கான அறிவித்தல்

அமானா வங்கி பி.எல்.சி. இன் பதினைந்தாவது வருடாந்தப் பொதுக் கூட்டம் இலக்கம் 486 காலி வீதி, கொழும்பு 03, இலங்கையிலுள்ள அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தில் 2024 மார்ச் 28 வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு டிஜிட்டல் தளத்தினைப் பயன்படுத்தி ஒரு இணையவழிக் கூட்டமாக இடம்பெறும் என இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

**நிகழ்ச்சி நிரல்**

1) வங்கியின் பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கையினையும் 31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த நிதியாண்டிற்கான வங்கியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களையும் அத்துடன் அவற்றின் கணக்காய்வாளர் அறிக்கையினையும் பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் கருத்திற்கொள்வதற்கும்.

2) வங்கியின் அமைப்பு அகவிதியின் உறுப்புரை 29 (13) இன் பிரகாரம் ஓய்வில் செல்லும் (நிறைவேற்று அதிகாரமற்ற, சுயாதீன பணிப்பாளரான) திரு. ஹைரூல் முஸாமல் பெரேரா பின் அப்துல்லாஹ் அவர்களை பணிப்பாளராக, மீளத் தெரிவுசெய்வதற்கு.

3) வங்கியின் அமைப்பு அகவிதியின் உறுப்புரை 29 (6) இன் பிரகாரம் சுழற்சி முறையில் ஓய்வில் செல்லும் (தலைவர், நிறைவேற்று அதிகாரமற்ற, சுயாதீனமற்ற பணிப்பாளரான) திரு. அலி அஸ்கர் அக்பரலி அவர்களை பணிப்பாளராக, மீளத் தெரிவுசெய்வதற்கு.

4) வங்கியின் அமைப்பு அகவிதியின் உறுப்புரை 29 (6) இன் பிரகாரம் சுழற்சி முறையில் ஓய்வில் செல்லும் (நிறைவேற்று அதிகாரமற்ற / சிரேஷ்ட சுயாதீன பணிப்பாளரான) திரு. திசான் சுபசிங்க அவர்களை பணிப்பாளராக மீளத் தெரிவுசெய்வதற்கு.

5) வங்கியின் அமைப்பு அகவிதியின் உறுப்புரை 29 (6) இன் பிரகாரம் சுழற்சி முறையில் ஓய்வில் செல்லும் (நிறைவேற்று அதிகாரமற்ற, சுயாதீனமற்ற பணிப்பாளரான) திரு. மொஹமட் ஆதம்மலி அவர்களை பணிப்பாளராக மீளத் தெரிவுசெய்வதற்கு.

6) பட்டயக் கணக்காளர்கள் நிறுவனமான, Ernst & Young நிறுவனத்தினை அடுத்த வருடத்திற்கான கணக்காய்வாளர்களாக மீள நியமிப்பதற்கு மற்றும் அவர்களது ஊதியத்தை தீர்மானிப்பதற்கு பணிப்பாளர்களுக்கு அதிகாரமளிப்பதற்கு.

7) கீழ்காணும் அங்கத்தவர்களைக் கொண்ட ஷரிஆ மேற்பார்வைச் சபையினை மீள நியமிப்பதற்கு:

(அ) அஷ்-ஷெய்க் கலாநிதி. முப்தி முஹம்மத் இம்ரான் அஷ்ரப் உஸ்மானி
(ஆ) அஷ்-ஷெய்க் முப்தி எம். ஐ. எம். ரிஸ்வி
(இ) அஷ்-ஷெய்க் முப்தி முஹம்மத் ஹஸ்ஸான் கலீம்

8) 2024 ஆம் நிதியாண்டிற்கு அறக்கொடைக்கான பங்களிப்பினை தீர்மானிப்பதற்கு சபைக்கு அதிகாரமளிப்பதற்கு.

9) உரிய அறிவித்தல் வழங்கப்பட்ட வேறு ஏதேனும் விடயங்களை கருதுவதற்கு.

சபையின் கட்டளையின் பிரகாரம்,
**அமானா வங்கி பி.எல்.சி.**

**செல்வி பி. எஸ். வட்ஸன்**
கம்பனி செயலாளர்

2024 பெப்ரவரி 17
கொழும்பு.

**குறிப்புகள்:**

i. மேற்குறிப்பிட்ட கூட்டத்தில் ஒரு பங்குதாரர் அவருக்கு/அவளுக்கு பதிலாக ஒன்லைன் இணையவழி மூலம் பங்குபற்றி வாக்களிப்பதற்கு ஒரு பதிலாளை நியமிப்பதற்கான உரிமையினை கொண்டுள்ளார். நியமிக்கப்படும் பதிலாள் வங்கியின் பங்குதாரராக இருக்கவேண்டிய அவசியமில்லை.

ii. இந்த நோக்கத்திற்காக ஒரு பதிலாள் படிவம் உள்ளடக்கப்பட்டுள்ளது.

iii. ஒன்லைன் தளத்தினூடாக வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பங்குபற்ற விரும்பும் பங்குதாரர்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள “பங்குதாரர் தகவல் பதிவீட்டினை” பூர்த்தி செய்து agm@amana.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு “AGM 2024” என்ற மின்னஞ்சல் தலைப்புடன் அனுப்பிவைத்தல் வேண்டும் அல்லது கூட்டம் நடைபெறுவதற்கு 2 நாட்களுக்குக் குறையாத காலத்திற்கு முன்னர் பெற்றுக்கொள்ளக்கூடியதாக கீழே குறிப்பிட்டுள்ள முகவரிக்கு தபால் செய்யவும். ஒன்லைன் தளத்தினூடாக கூட்டத்தில் பங்குபற்ற விரும்பும் பங்குதாரர்கள் இணையத்தள இணைப்பினைப் பெற்றுக்கொள்வதற்காக “பங்குதாரர் தகவல் பதிவீட்டில்” அவர்களது மின்னஞ்சல் முகவரியினை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

iv. பங்குதாரர்கள் தங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு பணிப்பாளர் சபையின் ஒரு அங்கத்தவரை அவரது/அவளது பதிலாளாக நியமிக்க விரும்பினால் பதிலாள் படிவத்தினை பூர்த்தி செய்து அவ்வாறு நியமிக்கலாம். அத்தகைய சந்தர்ப்பத்தில் பதிலாள் வைத்திருப்பவரின் மின்னஞ்சல் முகவரி அவசியமற்றதாகும்.

v. வருடாந்தப் பொதுக் கூட்டத்தினை கூட்டும் அறிவித்தலில் வழங்கப்பட்டுள்ள நிகழ்ச்சி நிரலில் நிரட்படுத்தப்பட்டுள்ள விடயங்களில் பங்குதாரர்கள் அவர்களது வினாக்கள்/கருத்துக்கள் என்பவற்றை agm@amana.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம் அல்லது கூட்டம் நடைபெறுவதற்கு 3 நாட்களுக்குக் குறையாத காலத்திற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கம்பனி செயலாளர், அமானா வங்கி பி.எல்.சி., கம்பனி செயலகப் பிரிவு, 6 ஆம் மாடி, இலக்கம் 403, காலி வீதி, கொழும்பு 3. இலங்கை என்ற முகவரிக்கு தபால் செய்யவும்.

vi. ஒரு பதிலாளை நியமிக்கும் ஆவணமானது கூட்டம் நடைபெறுவதற்கு 24 மணித்தியாலங்களுக்குக் குறையாத காலத்திற்கு முன்னர் அமானா வங்கி பி.எல்.சி., கம்பனி செயலகப் பிரிவு, 6 ஆம் மாடி, இலக்கம் 403, காலி வீதி, கொழும்பு 3. இலங்கை என்ற முகவரியில் வைப்பிலிடப்படல் வேண்டும்.

# பங்குதாரர் தகவல் பதிவீடு

Folio/CDS கணக்கு இலக்கம்*: ..........................................................................

| | | | | |
|---|---|---|---|---|
| 1. பங்குதாரரின் முழுப்பெயர்: | | | | |
| 2. பங்குதாரரின் முகவரி: | | | | |
| 3. பங்குதாரரின் தே.அ.அ./கடவுச்சீட்டு/ கம்பனி பதிவீட்டு இலக்கம்* : | | | | |
| 4. பங்குதாரரின் தொடர்பு இலக்கம்: | வதிவிடம்: | | மொபைல்: | |
| 5. பதிலாளது பெயர்: | | | | |
| 6. பதிலாளது தே.அ.அ./கடவுச்சீட்டு இலக்கம்*: | | | | |
| 7. பங்குதாரரது / பதிலாளது மின்னஞ்சல் முகவரி*: | | | | |
| 8. ஒன்லைன் தளத்தினூடாக வ.பொ.கூ. இல் பங்குற்றல்: | ஆம் | | இல்லை | |
| 9. கூட்டு பங்குதாரர்கள் எவரேனும் இருப்பின், அவர்களது பெயர்கள் : | அ. | | | |
| | ஆ. | | | |
| 10. கூட்டு பங்குதாரர்களின் தே.அ.அ. / கடவுச்சீட்டு இலக்கங்கள் *: | அ. | | | |
| | ஆ. | | | |

** தயவுசெய்து பொருத்தமற்றவற்றை நீக்கிவிடவும்*

| | | |
|---|---|---|
| ............................................. | ............................................. | ............................................. |
| **பிரதான பங்குதாரர்** | **1ஆவது கூட்டு பங்குதாரர்** | **2ஆவது கூட்டு பங்குதாரர்** |
| *கையொப்பம் & திகதி* | *கையொப்பம் & திகதி* | *கையொப்பம் & திகதி* |

**குறிப்புகள்:**

i. கூட்டத்தில் ஒன்லைன் பங்குபற்றலுக்கு வசதியளிப்பதற்காக உட்புகுதல் தகவலை அனுப்பிவைப்பதற்காக மேலே வழங்கப்பட்ட இடத்தில் பங்குதாரர்/கள் தங்களது மின்னஞ்சல் முகவரியினை வழங்குதல் கட்டாயமாகும்.

ii. கம்பனி /கூட்டுறவு பொருத்தமட்டில், கம்பனியின் அகவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் பங்குதாரர் தகவல் பதிவீட்டுப் படிவமானது அதன் பொதுவான முத்திரை இடப்பட்டு அதன் கீழ் கையொப்பமிடப்படல் வேண்டும்.

iii. பங்குதாரர் தகவல் பதிவீட்டுப் படிவமானது Attorney ஒருவரினால் கையொப்பமிடப்பட்டிருப்பின் பதிவீட்டிற்காக குறித்த Power of Attorney வங்கியின் பதிவுசெய்யப்பட்ட காரியாலயத்தில் வைப்பிலிடப்படல் வேண்டும்.

iv. சரியாக பூர்த்திசெய்யப்பட்ட “பங்குதாரர் தகவல் பதிவீட்டு” படிவமானது கூட்டம் நடைபெறும் திகதிக்கு முன்னர் இரண்டு (2) நாட்களுக்குக் குறையாத காலத்தில் கம்பனிச் செயலகப் பிரிவிற்கு கிடைக்குமாறு மின்னஞ்சல் முகவரி “agm@amana.lk” மூலம் அல்லது அமானா வங்கி பி.எல்.சி. கம்பனி செயலகப் பிரிவு 6ஆவது மாடி இலக்கம் 403, காலி வீதி கொழும்பு 3 இலங்கை என்ற முகவரிக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

# 2023 ஆண்டறிக்கையின் அச்சிடப்பட்ட பிரதியொன்றினை வேண்டுவதற்கான படிவம்

கம்பனி செயலாளருக்கு
அமானா வங்கி பி.எல்.சி., கம்பனி செயலாளர் பிரிவு,
6ஆம் மாடி, இலக்கம் 403, காலி வீதி,
கொழும்பு 3, இலங்கை.

**அமானா வங்கி பி.எல்.சி. இன் 2023 ஆண்டறிக்கையின் அச்சிடப்பட்ட பிரதியொன்றிற்கான வேண்டுகோள்**

2023 வருடத்திற்கான அமானா வங்கி பி.எல்.சி. இன் ஆண்டறிக்கையின் அச்சிடப்பட்ட பிரதியொன்றினை நான் /நாம்* பெற்றுக்கொள்வதற்கு விரும்புகின்றேன் /றோம்*. விபரங்கள் பின்வருமாறு

| | |
|---|---|
| பங்குதாரரின் முழுப்பெயர்: | |
| பங்குதாரரின் தே.அ.அ./கடவுச்சீட்டு / கம்பனி பதிவீட்டு இலக்கம்*: | |
| அங்கத்துவ இலக்கம்/ CDS கணக்கு இலக்கம் *: | |
| முகவரி: | |
| தொடர்பு இலக்கம்: | |
| மின்னஞ்சல் முகவரி: | |
| கூட்டு பங்குதாரர் தகவல்கள்: | |

** தயவுசெய்து பொருத்தமற்றவற்றை நீக்கிவிடவும்*

........................................................ ........................................................
கையொப்பம் திகதி

குறிப்புகள்:

1. 2023 ஆண்டறிக்கையின் அச்சிடப்பட்ட பிரதியொன்றிற்கான வேண்டுதல் படிவமானது (படிவம்) வாசிக்கக்கூடியதாக பூர்த்திசெய்யப்பட்டு, கையொப்பமிடப்பட்டு திகதியிடப்படல் வேண்டும்.
2. சரியாக பூர்த்திசெய்யப்பட்ட வேண்டுதல் படிவமானது கம்பனிச் செயலாளர், அமானா வங்கி பி.எல்.சி., கம்பனிச் செயலகப் பிரிவு, 6ஆவது மாடி, இலக்கம் 403, காலி வீதி, கொழும்பு 3, இலங்கை என்ற முகவரிக்கு தபால் மூலம் அல்லது agm@amana.lk என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
3. பங்குதாரர் ஒரு கம்பனியாக காணப்பட்டால், படிவமானது கம்பனியின் பொதுவான முத்திரையின் கீழ் உரியவாறு அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளினால் கையொப்பமிட்டு நிறைவேற்றப்படல் வேண்டும்.
4. படிவம் தொடர்பான ஏதேனும் வினாக்களுக்கு வேலை நாட்களில் முற்பகல் 9.00 இற்கும் பிற்பகல் 5.00 இற்கும் இடைப்பட்ட நேரத்தில் வங்கியின் கம்பனிச் செயலகப் பிரிவிலுள்ள பின்வரும் உத்தியோகத்தரை தயவுசெய்து தொடர்புகொள்ளவும்.

**திருமதி. சஹீலா சிப்லி - உதவி கம்பனி செயலாளர்**
தொலைபேசி: +94 11 7757511 I தொலைநகல்: +94 11 2565550 I மின்னஞ்சல்: shaheela.shibly@amana.lk

ஆண்டறிக்கையினை வங்கியின் இணையத்தளத்தில் www.amanabank.lk அல்லது கொ.ப.ப. இன் இணையத்தளத்தில் www.cse.lk பார்வையிடலாம்.

# பதிலாள் படிவம்

அமானா வங்கி பி.எல்.சி. இன் பங்குதாரரான/ பங்குதாரர்களான* ................................................................
.............................................................................................................................. என்னும் முகவரியைச் சேர்ந்த நான் / நாம்*
..............................................................................................................................................................................
என்னும் முகவரியைச் சேர்ந்த ............................................ தே.அ.அ. இலக்கம் ...................................................................
கொண்டவரை அல்லது அவர் /அவள்
இல்லாவிட்டால்

கீழ் காணப்படுவர்களில் யாரேனும் ஒருவரை,

1. திரு. அலி அஸ்கர் அக்பரலி அல்லது அவர் இல்லாவிட்டால்
2. திரு. மொஹமட் அஸ்மீர் அல்லது அவர் இல்லாவிட்டால்
3. திரு. திசான் சுபசிங்க அல்லது அவர் இல்லாவிட்டால்
4. திரு. டில்ஷான் ஹெட்டியாரச்சி அல்லது அவர் இல்லாவிட்டால்
5. திரு. மொஹமட் அதாவுர் ரஹுமான் சவுத்திரி அல்லது அவர் இல்லாவிட்டால்
6. திரு. செய்யட் முஹமத் அஸீம் ராஸா அல்லது அவர் இல்லாவிட்டால்
7. திரு. ஹைரூல் முஸாமல் பெரேரா பின் அப்துல்லாஹ் அல்லது அவர் இல்லாவிட்டால்
8. திரு. ஓமர் காஸிம் அல்லது அவர் இல்லாவிட்டால்
9. திரு. மொஹமட் ஆதம்மலி அல்லது அவர் இல்லாவிட்டால்
10. திரு. மொஹமட் ஹஸன்

இலக்கம் 486, காலி வீதி, கொழும்பு 3. இலங்கையிலுள்ள வங்கியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் 2024 மார்ச் 28 வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு டிஜிட்டல் தளத்தினூடாக இடம்பெறும் வங்கியின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் மற்றும் ஏதேனும் ஒத்திவைக்கப்பட்ட கூட்ட விடயங்கள் மற்றும் அதன் விளைவாக எடுக்கப்படும் ஒவ்வொரு வாக்கெடுப்பிலும் என்னை/எங்களை* பிரதிநிதித்துவப்படுத்தி எனது/எங்களது* சார்பில் எனக்காக/எங்களுக்காக* கதைப்பதற்கும் எனக்காக/எங்களுக்காக* வாக்களிப்பதற்கும் எனது/எங்களது* பதிலாளாக நியமிக்கின்றேன்/றோம்*.

*தயவுசெய்து பொருத்தமற்றவற்றை நீக்கிவிடவும்.

| | ஆதரவு | எதிர் | தவிர்த்தல் |
|---|---|---|---|
| 1. வங்கியின் பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கையினையும் 31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த நிதியாண்டிற்கான வங்கியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களையும் அத்துடன் அவற்றின் கணக்காய்வாளர் அறிக்கையினையும் பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் கருத்திற்கொள்வதற்கும். | ☐ | ☐ | ☐ |
| 2. வங்கியின் அமைப்பு அகவிதியின் உறுப்புரை 29 (13) இன் பிரகாரம் ஓய்வில் செல்லும் (நிறைவேற்று அதிகாரமற்ற, சுயாதீன பணிப்பாளரான) திரு. ஹைரூல் முஸாமல் பெரேரா பின் அப்துல்லாஹ் அவர்களை பணிப்பாளராக மீளத் தெரிவுசெய்வதற்கு. | ☐ | ☐ | ☐ |
| 3. வங்கியின் அமைப்பு அகவிதியின் உறுப்புரை 29 (6) இன் பிரகாரம் சுழற்சி முறையில் ஓய்வில் செல்லும் (தலைவர் / நிறைவேற்று அதிகாரமற்ற, சுயாதீனமற்ற பணிப்பாளரான) திரு. அலி அஸ்கர் அக்பரலி அவர்களை பணிப்பாளராக மீளத் தெரிவுசெய்வதற்கு. | ☐ | ☐ | ☐ |
| 4. வங்கியின் அமைப்பு அகவிதியின் உறுப்புரை 29 (6) இன் பிரகாரம் சுழற்சி முறையில் ஓய்வில் செல்லும் (நிறைவேற்று அதிகாரமற்ற / சிரேஷ்ட சுயாதீன பணிப்பாளரான) திரு. திசான் சுபசிங்க அவர்களை பணிப்பாளராக மீளத் தெரிவுசெய்வதற்கு. | ☐ | ☐ | ☐ |

# பதிலாள் படிவம்

| | ஆதரவு | எதிர் | தவிர்த்தல் |
|---|---|---|---|
| 5. வங்கியின் அமைப்பு அகவிதியின் உறுப்புரை 29 (6) இன் பிரகாரம் சுழற்சி முறையில் ஓய்வில் செல்லும் (நிறைவேற்று அதிகாரமற்ற, சுயாதீனமற்ற பணிப்பாளரான) திரு. மொஹமட் ஆதம்மலி அவர்களை பணிப்பாளராக மீளத் தெரிவுசெய்வதற்கு. | ☐ | ☐ | ☐ |
| 6. பட்டயக் கணக்காளர்கள் நிறுவனமான, Ernst & Young நிறுவனத்தினை அடுத்த வருடத்திற்கான கணக்காய்வாளர்களாக மீள நியமிப்பதற்கு மற்றும் அவர்களது ஊதியத்தை தீர்மானிப்பதற்கு பணிப்பாளர்களுக்கு அதிகாரமளிப்பதற்கு. | ☐ | ☐ | ☐ |
| 7. கீழ்காணும் அங்கத்தவர்களைக் கொண்ட ஷரிஆ மேற்பார்வைச் சபையினை மீள நியமிப்பதற்கு:<br>(அ) அஷ்-ஷெய்க் கலாநிதி. முப்தி முஹம்மத் இம்ரான் அஷ்ரப் உஸ்மானி<br>(ஆ) அஷ்-ஷெய்க் முப்தி எம். ஐ. எம். ரிஸ்வி<br>(இ) அஷ்-ஷெய்க் முப்தி முஹம்மத் ஹஸ்ஸான் கலீம் | ☐ | ☐ | ☐ |
| 8. 2024 ஆம் நிதியாண்டிற்கு அறக்கொடைக்கான பங்களிப்பினை தீர்மானிப்பதற்கு சபைக்கு அதிகாரமளிப்பதற்கு. | ☐ | ☐ | ☐ |

2024 ............................ மாதம் ............................................. கையொப்பமிடப்பட்டது.

.......................................................
கையொப்பம்

**தயவுசெய்து பின்வரும் தகவல்களை வழங்கவும்:**

பங்குதாரது தே.அ.அ. இலக்கம் / கம்பனி பதிவீட்டு இலக்கம்: ..........................................................................................

வைத்திருக்கும் பங்குகளின் எண்ணிக்கை ..........................................................................................................................

**பதிலாள் படிவத்தினை நிரப்புவதற்கான அறிவுறுத்தல்கள்**

1. பதிலாள் படிவமானது பங்குதாரரின்/பங்குதாரர்களின் பெயர், முகவரி என்பவற்றுடன் பதிலாள் வைத்திருப்பவரின் பெயர், முகவரி மற்றும் தே.அ.அ. இலக்கம் என்பவற்றை தெளிவாகவும் விளங்கத்தக்க வகையிலும் தனித்தனி எழுத்துக்களால் தக்கவாறு பூர்த்திசெய்யப்பட்டு பங்குதாரரினால்/பங்குதாரர்களினால் கையொப்பமிடப்படல் வேண்டும். நட்சத்திர அடையாளத்தினால் குறிப்பிடப்பட்ட பொருத்தமற்ற சொற்களை அவசியமில்லையெனக் கருதப்படுமிடத்து நீக்கிவிடவும்.
2. பூர்த்திசெய்யப்பட்ட பதிலாள் படிவமானது இலங்கை, கொழும்பு 3, இலக்கம் 403, காலி வீதி, 6ஆவது மாடியிலுள்ள கம்பனி செயலகப் பிரிவில் கம்பனி செயலாளரின் அலுவலகத்தில் கூட்டம் இடம்பெறுவதற்கு நியமிக்கப்பட்ட நேரத்திலிருந்து ஆகக்குறைந்தது 24 மணித்தியாலங்களுக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
3. பதிலாள் படிவமானது Power of Attorney ஒருவரினால் கையொப்பமிடப்பட்டிருந்தால், உரிய Power of Attorney வங்கியுடன் பதிவுசெய்யப்பட்டிருக்காவிட்டால், குறித்த Power of Attorney பூர்த்திசெய்யப்பட்ட பதிலாள் படிவத்துடன் பதிவுசெய்வதற்காக இணைக்கப்படல் வேண்டும்.
4. கம்பனி /கூட்டுறவு பொருத்தமட்டில், பதிலாள் படிவமானது அதன் பொதுவான முத்திரையின் கீழ் (பொருத்தமானவாறு), கம்பனியின் அமைப்பு அகவிதி/ஒருங்கிணைப்புச் சட்டம் என்பவற்றில் குறிப்பிட்டுள்ள விதத்தில் முத்திரை பொறிக்கப்பட்டு இரண்டு பணிப்பாளர்களினால் அல்லது ஒரு பணிப்பாளர் மற்றும் கம்பனியின் செயலாளரினால் கையொப்பமிடப்பட்டு அதன் மேல் கம்பனியின் இறப்பர் முத்திரை இடப்படுதல் வேண்டும்.